**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.315 நாள் : 10.10.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், சென்னையின் வளர்ச்சிக்கான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடும் வகையில், "நம்ம தங்கா" விழிப்புணர்வு சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், சென்னையின் வளர்ச்சிக்கான விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்திடும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம தங்கா" விழிப்புணர்வு சின்னத்தினை இன்று (10.10.2025) பாலவாக்கம் கடற்கரையில் நடைபெற்ற நிகழ்வில் அறிமுகப்படுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த நீல நிறக் காகம், சாதாரண பறவையாக இல்லாமல், மாநகராட்சியின் தூதுவராக மாநகராட்சியின் சேவைகளை மக்களிடையே கொண்டு சேர்ப்பதற்காகவும் மக்களுடன் சேர்ந்து சென்னையின் வளர்ச்சிக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் நிறுவப்பட்டுள்ளது.

பனை மரத்தைப் போல செழித்து வளரக் கூடிய பொறுமையையும், சூறாவளிக்குப் பிறகும் மீண்டு நிற்கும் வலிமையையும் "நம்ம தங்கா" பிரதிபலிக்கும். "நம்ம தங்கா" – இது நம் நகரத்தின் உறுதியான அடையாளம்.

"நம்ம தங்கா" சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மையான சென்னை, நீர் சேமிப்பு, மரம் நடுதல் போன்ற நன்மை செயல்களில் மக்களை ஊக்குவிக்கும் தூதுவராக திகழும். சென்னையின் ஒற்றுமையையும், புத்துணர்ச்சியையும், வளர்ச்சியையும் குறிக்கும் ஒரு சின்னமாக உருவாக்கப்பட்டுள்ளது. அனைவரையும் இணைக்கும் தூதுவர், நம் நகரின் புதிய நண்பர், புதிய குரல், புதிய ஆற்றல் ஆகியவற்றின் சின்னம் "நம்ம தங்கா.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**